மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதே கோவாப்டெக்ஸ் நிறுவனம் இவைகளையெல்லாம் செய்து வருகிறது. மேலும், தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் மூலம் ஜனதா மற்றும் ஏற்றுமதி இரகங்களை உற்பத்தி செய்யவும் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத் திட்டத்தினால் ஆண்டு ஒன்றுக்கு 10 இலட்சம் பெறுமான துணி ரகங்கள் அதிகமாகத் தயாரிக்கப்பட வாய்ப்பு உள்ளது, ஏற்கனவே விற்பனைப் பெருக்கத்திலே அரசு முழுமையாக ஈடுபட்டு வருகிறது. அதை அதிகரிப்பதற்கான முறையிலே அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

ஆற்காட்டிலுள்ள கிராமக் கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கம்.

151—(*வினா எண். 17420)—திரு. ஏ. எம். சேதுராமன் ; மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) ஆற்காட்டில் கிராமக் கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கத்திற்கு கிடங்கோடு கூடிய அலுவலகம் கட்டப்பட்டும் அச் சங்கம் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், சொந்தக் கட்டிடத்திற்கு மாற்றம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) பரிசீலனையில் உள்ளது.

திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்காட்டில் உள்ள விவசாய கடன் கூட்டுறவு வங்கிக்குச் சொந்தமாக கட்டப்பட்டிருக்கிற கட்டிடத்தின் மதிப்பீடு எவ்வளவு? அதைக் கட்டி எத்தனை ஆண்டுகள் ஆகிறது? அந்தக் கட்டிடத்தை தற்போது இந்த கூட்டுறவு வங்கி அனுபவித்துக் கொண்டு இருக்கிறதா? என்பதையும், அந்தக் கட்டிடத்தில் அதற்கான அலுவலகமும் சேர்த்து கட்டப்பட்டிருக்கிறதா என்பதையும், அப்படி இல்லை என்றால், அலுவலகத்தையும் அங்கேயே இயங்கச் செய்யும் வகையில், அமைச்சர் அவர்களோ, அரசோ நடவடிக்கை எடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

1984 பிப்ரவரி 23]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 40,000 மதிப்பீட்டிலே இந்தச் கிராமக் கூட்டுறவுச் சங்கம் கட்டப்பட்டிருக்கிறது. 1981-இல் கட்டி முடிக்கப்பட்டது. இது ஆற்காடு கிராமத்திலிருந்து 2 கிலோ மீட்டர் தொலைவிலே அமைந்திருக்கிற காரணத்தாலும் இந்தச் சங்கம் ஆற்காட்டில் உள்ள 4 வார்டுகளுக்கும் உணவு சம்பந்தமாக அத்தியாவசியப் பொருள்களை வினியோகம் செய்து வருகிற காரணத்தாலும், ஊரிலிருந்து இந்தக் கட்டிடம் 2 கிலோ மீட்டர் வெளியிலே இருக்கிற காரணத்தாலும் பொது மக்களுக்கு அங்கே கடை இருந்தால் அது இடையூறாக இருக்கும் என்ற காரணத்தாலும், ஆற்காடு கிராமத்தின் மையப் பகுதியில் ஒரு வாடகை கட்டிடத்தில், கடையும், கோடவுனுடன் கூடிய அலுவலகமும் 15—11—1970 முதல் இயங்கி வருகிறது. இந்தச் சங்கத்தில் நகைக் கடனும் வழங்குகிற காரணத்தால், சுமார் 7,26,894 ரூபாய் மதிப்புள்ள நகைகளும் இந்தச் சங்கத்திலே இருக்கிற காரணத்தால், இது வரையில் ஊரின் மையப் பகுதியிலேயே இந்த அலுவலகம் இயங்கிக் கொண்டு வருகிறது.

ஆனாலும், இதற்காக ஏற்கெனவே கட்டப்பட்டிருக்கிற இந்த புதிய கட்டிடத்திலேயே உர விற்பனையும் இந்தச் சங்கத்தின் மூலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இருந்தாலும் புதிய கட்டிடத்திலேயே சங்க அலுவலகத்தையும் மாற்ற, சங்கத்தினுடைய தலைவருக்கு ஏற்கெனவே ஆலோசனை வழங்கப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 10-10)

திரு. ஏ. எம். சேதுராமன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகின்றபோது ஆற்காடு நகரத்திலிருந்து அந்தக் கட்டிடம் 2 கிலோ மீட்டர் தூரத்தில் இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளதாகத் தெரிகிறது. அது ஆற்காட்டை ஒட்டி இருக்கிறது, கிராமப் பகுதி, அரை கிலோ மீட்டர் கூட இல்லாத இடத்தில் கோடவுன் கட்டி இப்போது விவசாயிகளுக்கு அனுகூலமான இடத்தில் இருக்கிறது என்றும் அந்த கோடவுனிலிருந்துதான் உர மூட்டைகளை வினியோகம் செய்து வருகிறார்கள் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். நகைகள் வைப்பதற்கு வசதிகளை செய்து கொடுக்க வேண்டுமென்ற முறையிலே வேலூர் கூட்டுறவுச் சங்கத்திலே கேட்டிருக்கிறோம், அதற்கான பாதுகாப்பு வசதிகளைச் செய்வதற்கு மனு செய்யப்பட்டிருக்கிறது. அந்த வசதியை அந்தச் சங்கத்திற்கு உடனடியாக வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: நான் ஏற்கெனவே சொன்னேன். புதிதாகக் கட்டப்பட்டிருக்கிற கட்டிடத்திலே தான் உர விற்பனை நடந்து வருகிறது. அலுவலகமும் புதுக் கட்டிடத்திலே இயங்க வேண்டுமென்று ஜே. ஆர். மூலமாக

[1984 பிப்ரவரி 23

சொல்லப்பட்டு, அந்தச் சங்கத் தலைவருக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அத்தியாவசியப் பொருட்களை சம்பந்தப்பட்ட வார்டுகளிலே கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சங்கத் தலைவருக்குத் தெரிவிக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

தொழுநோய் மறுவாழ்வு இல்லங்களில் சேர்க்கப்படும் நோயாளிகள்.

152 —(*வினா 18499)—**திரு. ஆர். ரங்கசாமி :** மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழு நோய் மறுவாழ்வு இல்லங்களில் நோயாளிகளைச் சேர்க்கும் பொழுது அவர்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் சேர்க்கப்படுகிறார்களா ?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கும் அத்தொழுநோய் பரவும் என்பது உண்மையா ?

(இ) அது சம்பந்தமாக அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) ஆம்.

(ஆ) பொதுவாக அது வயது வந்தவர்களுக்குப் பரவுவதில்லை. குழந்தைகள் தான் பாதிக்கப்படுவார்கள்.

(இ) குழந்தைகள் பள்ளி விடுதிகளில் சேர்க்கப்பட்டு நோயிலிருந்து பாதுகாக்கப்படுகின்றனர். நோயற்ற குழந்தைகளுக்கும் நோய் அணுகாமல் இருக்க தடுப்பு மருந்து அளிக்சப்படுகிறது.

திரு. ஆர். ரங்கசாமி : தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்திலே விண்ணம்பள்ளியிலே தொழு நோயாளிகள் மறுவாழ்வு இல்லத்தில் அந்த நோயாளிகளோடு குழந்தைகள் இருப்பதை நாங்களே பார்த்தோம். அப்படி இருப்பதால் நோய் அவர்களுக்கும் பரவாதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : பெரியார் மாவட்டத்திலே விண்ணம்பள்ளியில் பெரியவர்களோடு அவர்களுடைய குழந்தைகள் தங்கியிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்